# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வாராந்த பாடசாலை

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

பாடம் :- குடியியல்

3ம் வாரம்

தரம் :- 07

தயாரித்தவர்:- E. நிரோஷனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)

**பாட இலக்கம் : 02**

**தலைப்பு : எமது சமூகம்**

**01. பின்வருவனவற்றிற்கு சரி, பிழை இடுக.**

1) வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு ஒரு இலக்கை தெரிவு செய்து கொள்ளல் அவசியமன்று. (    )

2) சிகரட், போதை பொருள், தேவையற்ற புத்தகங்கள் என்பன சமூகத்தில் காணப்படும் தீய பழக்கங்கள் ஆகும். (    )

3) பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாத போது பலர் வாழ்வில் விரக்தியடைந்து தற்கொலைக்கு துணிகின்றனர். (    )

4) மனிதனிடம் காணப்படும் சிறந்ததோர் திறமை ஆக்கத்திறன் ஆகும். (    )

5) தற்கால சமூகம் எதிர்நோக்கும் பிரதான சவால்களில் தொற்றுநோய் பரவுதலும் ஒன்றாகும். (    )

6) சவால்களை எதிர்கொள்ளல் என்பதை குறிப்பது மிக விரைவாக தீர்க்கக்கூடிய பிரச்சினை மற்றும் இடையூறுகளாகும். (    )

7) எந்தவொரு பிரச்சினையின் போதும் அவற்றுக்குத் தீர்வாக ஒரு வழி மாத்திரமே உண்டு. (    )

8) ஓய்வை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதனால் உடல் உள ஆரோக்கியம் விருத்தியடையும். (    )

9) சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதனால் சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். (    )

10) விழுமியங்களின் குறைபாடு எதிர் நோக்கும் சவலாகும். (    )

**02. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு அவசியம் | ஓய்வு குறைவு |
| 2) கலைகளில் ஈடுபடுதல் | மத வழிபாடுகளில் ஈடுபடுதல் |
| 3) குடும்பத்தில் ஏற்படும் ஒரு பிரச்சினை | உளத்துணிவு |
| 4) நல்ல பிரஜை ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்பு | மனக்கட்டுப்பாடு ஏற்படும் |
| 5) கோபத்தை கட்டுப்படுத்தும் ஒரு வழிமுறை | பொறுமை |

**03. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) சவால் என்றால் என்ன?

2) அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

3) நிகழ்கால சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரதானமான இரு சவால்களை குறிப்பிடுக.

4) மேற்குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு உங்களால் முன்னெடுக்க கூடிய செயற்பாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக.

5) பாடசாலை மாணவர் எதிர்நோக்கி வருகின்ற பிரதானமான இரு சவால்களை குறிப்பிடுக.

6) நவீன ஊடகங்களை பயன்படுத்தும்போது எதிர்நோக்கக்கூடிய சவால்கள் மூன்றினை எழுதுக.

7) பரீட்சையில் வெற்றி பெறுவதற்கு மாணவர் ஒருவரால் செய்யக் கூடிய செயல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

8) நிகழ்கால சமூகத்தில் ஒருவர் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

9) சவால்களை வெற்றிக் கொள்வதற்கு விருத்திசெய்துக் கொள்ள வேண்டிய பண்புகள் மூனறினை குறிப்பிடுக.

10) ஆக்கத்திறன் மிக்க ஒருவரின் பண்புகள் ஐந்தினை குறிப்பிடுக.